1994 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றியும் கேள்வி, செய்தித் துறை அமைச்சருக்குத் தனியாகப் போடவேண்டும். வணிக வரித் துறை அமைச்சர் வரி போடுவதோடு சரி.

வினா எண் 91, திரு. கு. சிவசுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

91—

காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை அமைத்தல்

33152* **திரு. கு. சிவசுப்பிரமணியன்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், காடாம்புலியூரில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம் காடாம்புலியூரில் 1991-92-ஆம் ஆண்டு அப்பகுதியிலே இருக்கின்ற மூலப்பொருள்கள், கச்சாப் பொருள்களைக் கொண்டு உடனடியாக இரண்டாயிரம் கோடி ரூபாயில் ஒரு காகிதத் தொழிற்சாலை உருவாக்கும் திட்டம் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக கோப்பு எல்லாம் தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டது. பின்னர், அது மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு கிடப்பிலே போடப்பட்டு விட்டதாக அறிகிறேன். அந்தப் பகுதியிலே தொழிலாளர்கள் நிறைந்திருக்கின்றனர். அந்தப் பகுதி முந்திரிக்குப் பெயர் போனது. அந்தப் பகுதியில் இப்போது கரும்பு விவசாயத்திலே விவசாயிகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஆகவே அதைப் பயன்படுத்திக் கொள்கின்ற வகையில் தொழில் புரட்சிக்கு வித்திடுகின்ற வகையிலே - இன்றைக்கு இதய தெய்வம் நம்முடைய தமிழகத்தின் நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தை தொழில் துறையிலே முதன்மையான மாநிலம் ஆக்குவதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் நம் முதல்வர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ள, அமைதியே உருவாகக் காட்சியளிக்கும் நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் காலத்தில் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக ஒரு காகித ஆலை நிறுவ வேண்டுமென்று சொன்னால், கீழ்க்கண்ட வசதிகள் கண்டிப்பாக இருக்கவேண்டும்.

1. நாள் ஒன்றுக்கு 5 மில்லியன் கேலன் தண்ணீர் தேவைப்படும். இடையறாத நீர் வரத்துள்ள வசதி இருந்தால் தான் இந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கும்.

2. ஆண்டு ஒன்றுக்கு 80 ஆயிரம் டன் கடின மரம், மூங்கில் அல்லது 1.8 லட்சம் கரும்புச் சக்கை தேவைப்படும். இந்தப் பொருட்கள் தொடர்ந்து கிடைத்தல் வேண்டும்.

3. மூலப்பொருள்கள், இரசாயனப் பொருட்களை எடுத்துச் செல்லும் வகையில் நெடுஞ்சாலை வசதி அமைந்திருக்க வேண்டும்.

4. நிலக்கரி எடுத்து வரும் வகையில் ரெயில் பாதை வசதி அமைந்திருக்க வேண்டும்.

5. ஆலையில் இருந்து வெளிப்படும் கழிவுப் பொருள்களை அகற்றுவதற்கு சரியான இடம் இருக்க வேண்டும்.

6. சொந்த மின் உற்பத்தி செய்தல் அல்லது தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் மின் சக்தி வழங்க உறுதி செய்யப்பட வேண்டும்.

7. ஒரு காகித ஆலை ஆதாயம் ஈட்டும் வகையில் செயல்படுவதற்கான குறைந்தபட்சத் திறன் நாள் ஒன்றுக்கு 100 டன் ஆகும். அத்தகைய ஆலைக்கு மாசுக் கட்டுப்பாடு நிபந்தனைகளுக்கு ஏற்பவும், பொருளாதார ரீதியாகவும் ஒரு ரசாயன சேமிப்பு இயந்திரம் அமைக்கப்பட வேண்டும்.

1994 நவம்பர் 10]

தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் காடாம்புலியூரில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைத்து நடத்த மிக முக்கியத் தேவை தண்ணீர் வசதி. அங்கே போதிய தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அந்த இடத்தில் காகித ஆலை அமைப்பதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகருக்கு குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது இதே காடாம்புலியூரில் இருந்து தான் நாம் தண்ணீரே வரவழைத்துக் கொடுத்தோம் என்பதை நான் இந்த அவைக்குக் கூறிக்கொள்கிறேன். அதேநேரத்தில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த அவையின் வாயிலாக நான் கூறிக்கொள்ள விரும்புவது, அவர்கள் குறிப்பிட்ட அத்துணை வளங்களும் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்" என்று சொன்ன தத்துவத்திற்கு ஏற்ப, இன்றைக்கு வீழ்ந்து கிடந்த, வீழ்ச்சியுற்ற தமிழகத்தை எழுச்சியடையச் செய்ய வேண்டும், வீழ்ந்து கிடந்த தேகத்தில் வலிமை ஏற்ற வேண்டும், வஞ்சகத்தை, சூழ்ச்சியை, பொறாமை தன்னை இன்றைக்கு தினம் தினம் எதிர்வரும் சவால்களை எல்லாம் தூள் தூளாக்கும் வலிமைபடைத்த நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தச் சாதனையைச் செய்து தர வேண்டுமென்று கேட்கின்றேன். அதேநேரத்தில் அதற்குப் பக்கத்திலே 10 கிலோமீட்டர் தூரத்தில் வடக்குத்தில் கங்கப்பா பேப்பர் மில் என்று ஒன்று தனியாரால் ஆரம்பிக்கப்பட்டு, அது மூடப்பட்டு விட்டது. வடலூர் சேசசாயி மில் கூட மூடப்பட்டு இன்றைக்கு பி.ஐ.எப்.ஆர். மூலமாக வைன்ட் அப் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதை நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தென்னாற்காடு மாவட்டத்தில் காகித ஆலை வேண்டும் என்பதற்காக பாரதிதாசனை துணைக்கு அழைத்து நம்முடைய நாவலருடைய பாணியிலே அதைச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் அங்கே இப்பொழுது சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொல்லியிருக்கிறேன். அவர் சொல்கிற காடாம்புலியூரில் 5 மில்லியன்

கேலன் தண்ணீர் தேவைப்படும் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து எதிர்காலத்தில் இது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தில் பெண்ணாடம், சேத்தியாதோப்பு ஆகிய இரண்டு இடங்களிலும் சர்க்கரை ஆலை இயங்குவதால் அதில் கிடைக்கும் சக்கையைக் கொண்டு தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டத்தை வளமாக்கவும், வளர்ச்சியைச் செய்யவும் எங்கள் அன்புத் தாய், இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஏதேனும் ஒரு இடத்தில் காகிதத் தொழிற்சாலை அமைக்க ஒரு திட்டம் தீட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு என்னென்ன வசதிகள் இருக்க வேண்டும் என்பதை எல்லாம் சொல்லியிருக்கிறேன். இதையே தான் உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியன் அவர்களும் கேட்டார்கள் இந்த அடிப்படை வசதிகளில் எல்லா வசதிகளும் இருந்தாலும் தண்ணீர் வசதி இல்லாத காரணத்தாலே அதை இப்பொழுது தற்சமயம் பரிசீலிப்பதற்கு இல்லை. தண்ணீர் வசதி உள்ளதா என்பதை மீண்டும் ஆராய்ந்து எதிர்காலத்தில் இதுகுறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கேட்பது இன்னொரு இடத்தில். இந்த இடத்தில் இல்லையென்று சொன்னால் அதே மாவட்டத்திலே பக்கத்திலே வேறு இரண்டு இடங்களைச் சொல்லி கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மாவட்டத்தில் வேறு ஓர் இடத்தில் இத்தகைய வசதிகள் இருக்குமேயானால் நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.